செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

சத்யமேவ ஜயதே

## சுவடியியல் புலம்

நாள்: 05.02.2024

## நடத்தும்

# பயிலரங்கம் - 18

# தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும்– ஒப்பாய்வு

(A Comparative Study On First Editions and Re Editions Of Classical Texts)

**(28.02.2024 முதல் 05.03.2024 வரை)**

## அறிவிப்பும் அழைப்பும்

நாற்பத்தொரு தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதல் பதிப்புகள் குறித்த தகவல்களையும் பதிப்பு முறைகள் குறித்த விவரங்களையும் நாம் அறிந்துவைத்திருக்கிறோம். ஆனால் இம்முதற்பதிப்பு நூல்கள் மீண்டும் மறுபதிப்புகளாக அவ்வப்போது வெளிவந்திருக்கின்ற வரலாறு குறித்தும் அவற்றின் பதிப்பு முறைகள் குறித்தும் அறிவது அவசியமாகின்றன.

ஒரு பதிப்பாசிரியர் ஒரு நூலைப் பலமுறைப் பதிப்பிப்பதற்கான காரணங்களையும் நோக்கங்களையும் அறிவது ஆய்வுச் சூழலின் அவசியமாகும். சான்றாக, ஐங்குறுநூறு நூலிற்கு 1903இல் முதல் பதிப்பையும் 1920இல் இரண்டாம் பதிப்பையும் 1944இல் மூன்றாம் பதிப்பையும் முறையே உ.வே.சாமிநாதையர் வெளியிட்ட வரலாற்றை இங்கே நாம் நினைவுகொள்ளலாம். உ.வே.சா. எழுதிய குறிப்புரைகளைக் கொண்டு 1949ஆம் ஆண்டு அவரது திருமகனார் எஸ். கலியாணசுந்தரமையர் மீண்டும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு மறுபதிப்புகளின் தேவை ஏன் எழுகிறது? எதற்காகப் பதிப்பிக்கப்படுகிறது? பதிப்பிக்கப்பட வேண்டிய கூடுதல் தேவை என்ன? என்ற வரலாற்றை அறிவது புலமைச் சமூகத்தின் வரலாற்றை அறிவதாகும். தொல்காப்பியம்

முதலாக முத்தொள்ளாயிரம் ஈறாக 41 செவ்வியல் நூல்களின் முதல் பதிப்புகள், மறுப்பதிப்புகள் குறித்து அறிந்துகொள்வதன் மூலம் செம்பதிப்பின் தேவைகளை நாம் அறிந்துகொள்ள முடியும்.

செம்பதிப்புகளின் தேவைகள் குறித்துத் தமிழ்க் கல்விப் புலத்திலும், பொது வெளியிலும் போதிய விழிப்புணர்வு உருவாகவில்லை. எனவே தமிழ்க் கல்விப் புலத்திலுள்ள ஆய்வாளர்களிடம் செம்பதிப்புப் பணிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு இப்பதிப்புப் பணிகளின் முக்கியத்துவத்தினை அறியவைப்பதும் ஆய்வில் ஈடுபட வைப்பதும் தேவையாகின்றன.

தமிழ்ப் பாடத்திட்டத்திலும் பதிப்பியல் சார்ந்த பாடம் இடம்பெறுவதற்கான சூழலும் உருவாக்கப்பட வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு "**தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும்**" எனும் பொருண்மையிலான பயிலரங்கத்தினை நடத்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சியளிக்க உள்ளனர். கல்லூரி/பல்கலைக்கழகத்தில் பயிலும் முனைவர் பட்ட, ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை – 30.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 28.02.2024 முதல் 05.03.2024 வரை (தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத்

தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.

8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக ஆணை அனுப்பிவைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: **19.02.2024.** இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **20.02.2024** அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

## சுவடியியல் புலம்

## நடத்தும்

## பயிலரங்கம் - 18

## தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதற்பதிப்புகளும் மறுபதிப்புகளும் – ஒப்பாய்வு

(A Comparative Study On First Editions and Re Editions Of Classical Texts)

**(28.02.2024 முதல் 05.03.2024 வரை)**

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| Name | தமிழ் | | | | | | நிழற்படம்/ Photo |
| | | English | | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth/ Age | | | | | | | |
| 3. | பாலினம் \| Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | | |
| 4. | வகுப்பு \| Class (✓) | | | பொது/ General | | இ.பி.வ.\| OBC | | பட்டியல் இனம் \| SC/ ST | |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \| Date of Joining & Year in M. Phil & Ph.D. | | | | | | | |

<table>
<tr><td>7.</td><td>ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | M. Phil & Ph.D. Research Topic</td><td></td></tr>
<tr><td>8.</td><td>பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br>| University / College/Institute Address (Contact number & Email)</td><td></td></tr>
<tr><td>9.</td><td>இல்ல முகவரி & தொடர்பு எண் |Residential address & Contact number</td><td></td></tr>
<tr><td>10</td><td>புலன எண் | WhatsApp number</td><td></td></tr>
<tr><td rowspan="2">11</td><td rowspan="2">செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details</td><td>ஆம் | Yes<br>இல்லை| No</td></tr>
<tr><td></td></tr>
</table>

**இடம்:**

**நாள்:** **(கையொப்பம்)**

**நெறியாளர் /துறைத் தலைவர்/**

**முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்**